செய்தி வெளியீடு எண்: 536 நாள்:26.08.2019

<u>செய்தி வெளியீடு</u>

**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம், சென்னை – 600 106**

**பி.எஸ்.எம்.எஸ். / பி.ஏ.எம்.எஸ். / பி.யு.எம்.எஸ். / பி.எச்.எம்.எஸ். மருத்துவ பட்டப்படிப்புகள் [அரசு மற்றும் சுயநிதி இந்திய மருத்துவம் (ம) ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள அரசுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்களுக்கு] 2019–20**

தமிழ்நாடு அரசு மற்றும் சுயநிதி இந்திய மருத்துவம் (ம) ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகளில் 2019–20 ஆம் ஆண்டிற்கு பி.எஸ்.எம்.எஸ். / பி.ஏ.எம்.எஸ். / பி.யு.எம்.எஸ். / பி.எச்.எம்.எஸ். மருத்துவ பட்டப்படிப்புகளில் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் **மேல்நிலைப் பள்ளி தேர்வில் அல்லது அதற்கு நிகரான தேர்வில் ( அறிவியல் பாடங்கள் (ம) ஆங்கிலம் எடுத்து ) தேர்ச்சி பெற்று மற்றும் 2019 மருத்துவப் பட்டப் படிப்பிற்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு ( NEET U.G.-2019 ) எழுதி, தேவையான தகுதி சதமான மதிப்பெண் பெற்றவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன ( மேலும் தகுதிப் பற்றிய விவரங்களுக்கு வலைதள அறிவிக்கையை பார்க்கவும் ).** விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பினை 28–08–2019 முதல் 13–09–2019 பிற்பகல் 03.00 மணி வரை மட்டும் எங்களது அலுவலக வலைதளமான **"www. tnhealth.org"** யிலிருந்து பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம். மேலும் விவரமான வலைதள அறிவிக்கை, மேற்கண்ட படிப்புகளுக்கான அரசு மற்றும் சுயநிதி சிறுபான்மையினர் / சிறுபான்மையினரற்ற இந்திய மருத்துவம் (ம) ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகளின் விவரம், தகவல் தொகுப்பேடு, பொது மற்றும் சிறப்பு விண்ணப்ப பதிவிறக்கம் மற்றும் அவற்றின் கட்டணம், குறைந்தபட்ச தகுதி சதமான மதிப்பெண்கள், இட ஒதுக்கீடு விதிமுறைகள், படிப்புகளின் விவரம், சிறப்பு பிரிவினர், அடிப்படைத்தகுதி, கல்விக்கட்டணம் மற்றும் இதர விவரங்களுக்கு **"www.tnhealth.org "** என்ற வலைதளத்தை தொடர்புக் கொள்ளலாம்.

**விண்ணப்ப படிவம் மற்றும் தகவல் தொகுப்பினை பதிவிறக்கம் செய்ய நாள் : 28–08–2019 முதல் 13–09–2019 பிற்பகல் 03.00 மணி வரை.**

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் பெற கடைசி நாள்: 13 –09–2019 மாலை 5.30 மணி வரை.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**